1971 ஜூலை 10]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனியாக அந்தக் கேள்வி வருகிறது. அந்த உத்தேசமும் இல்லை.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, தெற்கு மாவட்டங்களை ஒன்றாக இணைத்து மதுரையிலே அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டியை அமைப்பதன் மூலம் தென்மாவட்டங்களுக்கு வசதியாக இருக்கும். எனவே மதுரையில் ஏற்படுத்த மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதுரை வேளாண்மைக் கல்லூரி இப்பொழுது கோவைக் கல்லூரியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே மதுரைக்கு அவசியமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கோயம்புத்தூரில் பல்கலைக் கழகம் ஏற்கனவே ஆரம்பிக்க இந்தச் சபை முடிவு செய்து சீக்கிரம் ஆரம்பிக்கப்படக்கூடிய நிலையிலே இருப்பதால், தஞ்சை, திருச்சி போன்ற இடங்களில் கல்லூரிகள் துவங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, கோவையில் இப்பொழுது பல்கலைக்கழகம் 1—6—1971 முதல் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மதுரைக் கல்லூரி கோவையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, தஞ்சையைப் பொறுத்தவரையில் திருச்சியில் இப்பொழுது கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைச்சரவை முடிவு செய்தபடி திருச்சியில் துவக்குவதற்கு உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. தஞ்சையைப்பற்றி அப்படி இப்பொழுது திட்டம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, விவசாயக் கல்லூரி இல்லாத ஜில்லாக்களுக்கு ஏதாவது பிரையாரிட்டி கொடுக்க அரசாங்கத்திடம் செயற்குறிப்பு இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. வீ. சா. இளஞ்செழியன் : தலைவரவர்களே, திருச்சியிலே ஆரம்பிக்கப்படுகின்ற கல்லூரி பேரறிஞர் அண்ணா அவர்களின் பண்ணையில் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் அங்கத்தினருடைய யோசனை கவனிக்கப்படும்.

* 190. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க அரசு ஆலோசனை செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது எங்கு துவக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கே இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் வேளாண்மையை நம்பியிருக்கும் மாவட்டம். கோவையில் துவக்கப் படும் அந்தப் பல்கலைக்கழகத்தில் தஞ்சை மாவட்ட மாணவர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தஞ்சையில் இப்பொழுதே ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணையில் திவிரமான ஆராய்ச்சி நடை பெற்று, அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆராய்ச்சிப் பண்ணையில் சொல்லப்பட்ட யோசனைகளைத் தமிழகம் முழுவதும் சொல்லப்பட்டு வருகிறது. எனவே, இப்பொழுது ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. மாணவர்களைச் சேர்ப்பதைப் பொறுத்த வரையில் தகுதி, திறமை ஆகிய காரணங்களைப்பற்றி முடிவு செய்யப்படும். கோவையில் இருப்பது, தஞ்சைக்கு மட்டும் அல்ல, தமிழகம் முழுவதற்கும் சொந்தம். எனவே எல்லாவற்றிற்கும் ஒரே முறையில் தான் தேர்ந்தெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், சமயபுரத்திற்கு அருகா மையில் போஜேஸ்வர் ஆலயத்திற்கு அருகில் இருக்கும் இடத்தில் அக்ரிகல்சுரல் காலேஜ் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது, அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சமயபுரத்திற்கருகில் துவக்குவதுபற்றி அப்படி ஒன்றுமில்லை. ஏற்கெனவே அப்படிப்பட்ட குறிப்புகளும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், கன்னியாகுமரி ஜில்லாவில் அரசாங்கக் கல்லூரி பொதுவாக ஒன்றுமில்லை. அங்கே விவசாயக் கல்லூரியை தொடங்க தேவையான, அரசாங்கம் நிலம் 100 ஏக்கர் அளவில் இருக்கிறது, மற்ற வாய்ப்புகளும் இருக்கின்றன. ஆகவே, அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது கன்னியா குமரி ஜில்லாவில் பழ ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டிருக்கிறது. தனியாக அங்கே துவக்க எந்தவித யோசனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், அமைச்சரவர்கள் சமய புரத்திற்கு அருகிலே அந்த அக்ரிகல்சுரல் காலேஜ் ஆரம்பிக்க குறிப்பு ஒன்றும் இல்லை என்று கூறினார்கள். இப்பொழுது ஒரு குறிப்பை ஏற்படுத்தி அங்கே ஆரம்பிக்க அரசு முன்வருமா, என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, குடுமியான்மலைப் பண்ணையில் அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பண்ணை ஏறத்தாழ 3,000 ஏக்கர் கொண்டது. இப்பொழுது நல்ல விதத்தில் பயன்பட்டு வருகிறது. மேலும் 5,000 ஏக்கர் ஒட்டியிருப்பதால் 8,000 ஏக்கர்களில் அங்கே துவக்கப்படும் அந்தப் பண்ணை ஆரம்ப காலத்திலேயிருந்து இன்றுவரை லாபத்தில்

1971 ஜூலை 10]

இருக்கிறது. அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள இந்தப் பண்ணையைப்பற்றி பிற மாநிலத்தவர்களும் அதிசயப்படும் அளவிற்கு வேலை நடைபெற்று வருகிறது. எனவே, திருச்சி மாவட்டத்தில் குடுமியான் மலைப் பண்ணை ஒன்றே போதும் என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சையில் வேளாண்மை பல்கலைக்கழகம் இல்லாவிட்டாலும் ஒரு வேளாண்மைக் கல்லூரியாவது துவங்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வடார்க்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் இருக்கும் மாணவர்களும் கோயம்புத்தூர் செல்ல வேண்டியிருக்கிறது. இராணிப்பேட்டைக்கு அருகில் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் நவலக் என்ற இடத்தில் இருக்கிறது. அந்த இடத்தில் துவங்கினால் பல மாவட்டங்கள் பயன்பெறும். அப்படிப்பட்ட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நவலக் பண்ணையை மேலும் விரிவுப்படுத்தும் திட்டமே இப்பொழுதுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் திட்டம் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதுபோல வடார்க்காடு மாவட்டத்தில் செங்கம் பகுதியில் மத்திய சர்க்கார் ஆராய்ச்சி நிலையம் துவக்க அந்த இடத்தைப் பார்த்து விட்டுப் போய் இருக்கிறார்கள். விரைவில் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, இப்பொழுது அதற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன்.

இணைப்புப் பேருந்துகள்

* 191. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்தில் 2 பேருந்துகளை ஒன்றாக இணைத்துவிட திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறை, சென்னை மாநகரில் தொடர்ப் பேருந்துகளை (trailor buses) இயக்கி வருகின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, டிரெய்லர் பஸ் இலாபகரமாக இயங்குகிறதா இல்லையா? இலாபகரமாக இயங்குகிறது என்றால் விரைந்து, பல டிரெய்லர்களை இடைஞ்சல் இல்லாத ரோடுகளில் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் தொடர்பேருந்துகள் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இது இலாபகரமாக நடைபெறுகிறதா இல்லையா என்பது கேள்வி அல்ல, ஏனென்றால் கழிக்கப்பட்ட வண்டிகள், "கண்டெம்ட் வெகிகிள்ஸ்" ஐ எடுத்து அதிலே இப்படிப் பட்ட டிரெய்லர் பஸ்கள் தயாரிக்கப்பட்டு அந்தப் பேருந்